செ.வெ.எண்:49 நாள்:25.10.2021

**கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.வி.ஜெயசந்திர பானுரெட்டி இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் இன்று (25.10.2021) நடைபெற்றது.**

கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (25.10.2021) மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்கள் பல்வேறு வகையான உதவித்தொகைகள், விலையில்லா தையல் எந்திரம், சலவைப் பெட்டி, மற்றும் சாலை வசதி, மின் இணைப்பு, வீட்டுமனைப் பட்டா மற்றும் பல்வேறு கோரிக்கைகள் உள்ளிட்ட 147 மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட தகுதியான மனுக்கள் மீது வரும் 3 நாட்களுக்குள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், தகுதியில்லாத மனுக்கள் தொடர்ந்து வரும் பட்சத்தில் அந்த மனுக்களுக்கு உரிய விளக்கத்தினை மனுதாராருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் துறை அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்.

மேலும், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் 539 திங்கள் தின மனுக்களுக்கும், முதலமைச்சரின் சிறப்பு மனுக்கள் பிரிவின் கீழ் 2392 மனுக்களுக்கும், முதலமைச்சரின் உதவி மையத்தின் மூலம் வரப்பெற்ற 9563 மனுக்களுக்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உங்கள் தொகுதியில் முதலமைச்சர் திட்டத்தின் கீழ் வரப்பெற்ற மனுக்களுக்கு விரைவாக நடவடிக்கை எடுத்த அலுவலர்களுக்கு பாராட்டுகளை தெரிவித்தார். தொடர்ந்து, மீதமுள்ள மனுக்களுக்கு விரைந்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியின் போது மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.செ.ராஜேஸ்வரி, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர்(பொது) திரு.பி.முருகன், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) திருமதி.பாக்கியலட்சுமி, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அலுவலர் திரு.ஜி.அமீர்பாஷா ஆதிதிராவிடர் நலத்துறை அலுவலர் திருமதி.சாந்தி உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.**